# ஸ்டாலின் ஜெகதீஸ் சபதம்.

## மானம் பெரிதா? உயிர் பெரிதா?

## முதன் மந்திரி அவமதிப்பை சகிக்க முடியுமா?

### "அறிவிலி" என்ற ஆச்சாரியார் மன்னிப்புக்கேட்க வேண்டும்.

### "கட்டாய ஹிந்தி ஒழிய வேண்டும்" இன்றேல் உயிர் விடுவது நிச்சயம்.

### மாஜி கவர்னர் முயற்சி தோல்வி

—:o:—

(நமது நிருபர்)

சென்னை, ஜூன் 7.

இன்று (7-6-38) காலை 9 மணிக்கு பிரபல பெரிய மனிதர்களால், ஸ்டாலின் உண்ணாவிரதத்தை நிறுத்தும் பொருட்டுப் பலமான முயற்சி செய்யப்பட்டது. ஆனால் ஸ்டாலின் ஜெகதீஸ் ஹிந்தி ஒழிந்தாலல்லாது உண்ணாவிரதத்தை நிறுத்த முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்.

இன்று காலை 9-மணிக்கு மாஜி கவர்னர் ஸர். கே. வி. ரெட்டி நாயுடு, மாஜி மந்திரி எஸ். முத்தைய முதலியார் சி. ஐ. இ., திவான்பகதூர் நாராயணராவ் நாயுடு (ரிட்டையர்டு டிஸ்ட்ரிக்டு ஜட்ஜ்), தோழர் சிவராஜ் எம். எல். ஏ. முதலானவர்கள், தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களிடம் வந்து உண்ணாவிரதத்தை நிறுத்தும்படியும் பழரசம் சாப்பிடும்படியும் மன்றாடிக் கேட்டுக்கொண்டு ஒரு மணி நேரம் வாதாடினார்கள். தோழர் ஸ்டாலின் அவர்கள் என்ன பதில் சொல்லுவாரோ என்ற ஆவலுடன் சுமார் 50 பிரபலஸ்தர்கள் வெளியில் காத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வேண்டுகோளையும் காரணங்களையும் கேட்டுக் கொண்டிருந்த ஸ்டாலின் ஜெகதீஸ் தமக்கு இளைப்பாக இருக்கிறதென்றும் சற்று நேரம் தனியே யிருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதனால் தலைவர்கள் வேறு அறைக்குச் சென்று விட்டார்கள். இதற்குள் கூடை கூடையாய் ஆரெஞ்சுப் பழங்களையும் வாங்கி வந்து சாறு பிழிந்து விட்டார்கள். ஸ்டாலின் பேச முடியாத நிலையிலிருந்தபடியால் கீழ்க்கண்ட கருத்துள்ள கடிதத்தை எழுதி, பக்கத்து அறையில் இருந்த தலைவர்களுக்குத் தோழர் சிவராஜ் அவர்களிடம் கொடுத்து அனுப்பினார். தோழர் சிவராஜ் அவர்கள் அந்தக் கடிதத்தை அவர்களுக்குப் படித்துக் காட்டினார். அந்தக் கடிதம் வருமாறு:-

"தமிழர்களை அறிவிலிகள் என்று சொன்னதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டும் ஹிந்தியைக் கட்டாயபாடமாக வைக்கவில்லை என்று கவர்ன்மெண்டு உத்தரவு பிறப்பிக்கிற வரையில் உண்ணாவிரதத்தை நான் நிறுத்த முடியாது. தங்கள்வேண்டுகோளை இந்த விஷயத்தில் மறுப்பதற்காக என்னை மன்னிக்க வேண்டும்."

இந்தக் கடிதத்தை தோழர் சிவராஜ் அவர்கள் படித்தபோது தலைவர்கள் மிக்க மனவருத்தத்துடன் விடை பெற்றுப் பிரிந்து போனார்கள். வெளியில் காத்துக்கொண்டிருந்த கூட்டத்தவர்களில் சிலர் வருத்தத்துடனும் சிலர் அவரது மன உறுதியைப் பாராட்டிக் கொண்டும் சென்றார்கள்.

இன்று (7-6-38) தோழர் ஸ்டாலின் அவர்களின் உண்ணா நோன்பு 38-ம் நாள். பலயீனம் களைப்பு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. நெருங்கிய பந்துக்களும் நண்பர்களும் பல ஊர்களிலிருந்தும் வந்து பார்த்து விட்டுப் போகிறார்கள். அவருக்கு அதிக தொந்தரவு ஏற்படாதபடி முக்கியமானவர்களை மட்டும் பார்க்க அனுமதிக்கப்படுகிறது. நேற்று (6-6-38) மாலை சென்னை சிவஞானம் பார்க்கில் கூடிய மாபெருங் கூட்டத்தில் தோழர் ஸ்டாலின் சற்று நேரம் வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களின் நெருங்கிய நண்பரான ஸ்ரீரங்கம் எஸ். கோவிந்தசாமி அவர்கள், தோழர் ஸ்டாலின் அவர்களைப் போற்றியும் விரைவில் வெற்றியடையவும் தந்தி அனுப்பினார். அதற்கு ஸ்டாலின் அவர்கள் தந்திமூலம் பதில் தெரிவித்துள்ளார்.